தினத்தந்தி
ஞாயிறு மலர்



# திகைக்க வைக்கும் 'தேசப் பொக்கிஷம்'



விஜயலெட்சுமிக்கு அப்போது 19 வயது. திருமணமாகி புகுந்த வீட்டிற்கு வந்த புதிது. அவரது கையில் கணவர் எம்.எல்.ராஜேஷின் சம்பள விவர குறிப்பு கிடைக்கிறது. பார்த்தவருக்கு அதிர்ச்சி.

"நீங்கள் மத்திய அரசு நிறுவனத்தில் வேலை செய்வதை நினைத்து ரொம்ப சந்தோஷப்பட்டேன். ஆனால் உங்கள் இந்த மாத சம்பள பட்டியலைப் பார்த்தால் கடன்களுக்காக நிறைய பணத்தை பிடித்தம் செய்திருக்கிறார்களே. உங்கள் சம்பள நிலவரம் இப்படி இருந்தால், எதிர்காலத்தில் நாம் குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் போது அவர்களுக்காக நம்மிடம் சேமிப்பு எதுவும் இருக்காதே.." என்று கவலையோடு கணவரிடம் கேட்க, அவரோ மனைவியிடம், "அவசரப்படாதே..! நமது குழந்தைகளுக்காக நான் பணத்தை சேமித்து வைக்கவில்லை என்பது உண்மைதான். ஆனால் எதிர்கால சந்ததிக்காக நான் பெரும் பொக்கிஷத்தையே சேமித்துவைத்திருக்கிறேன். அதற்காக நான் சில லட்சங்கள்தான் கடன் பட்டிருக்கிறேன். ஆனால் நான் சேமித்திருப்பவை கோடிக்கு மேல் மதிப்புமிக்கவை. எத்தனை கோடிகள் கொடுத்தாலும் இப்போது அவை கிடைக்காது.." என்றபடி, தான் சேமிப்புகளை மனைவியிடம் திறந்து காட்ட, ஆச்சரியத்தில் மூழ்கிப்போனார், விஜயலெட்சுமி. உடனே கழுத்தில் கிடந்த புத்தம்புது தங்க சங்கிலியையும் கழற்றிக்கொடுத்து, "தேவைப்பட்டால், இதையும் பயன்படுத்திக்கொள்ளுங்கள்" என்று இன்ப அதிர்ச்சி கொடுத்தார்.

அந்த ஆச்சரியத்திற்கும், இன்ப அதிர்ச்சிக்கும் காரணம் காந்திஜி. ராஜேஷ் சேமித்து பாதுகாப்பவை உலக நாடுகள் அனைத்தும் வெளியிட்டிருக்கும் காந்திஜியின் அபூர்வ தபால்தலைகள்.

"உலகத்தில் எந்த தலைவருக்கும் கிடைக்காத மிகப் பெரிய கவுரவம் காந்திஜிக்கு கிடைத்திருக்கிறது. 120 நாடுகள் 400–க்கு மேற்பட்ட விதவிதமான ஸ்டாம்புகளை காந்திஜியை பெருமைப்படுத்தும் விதத்தில் வெளியிட்டுள்ளன. தங்க இழைகளாலும், பிகாசோ ஓவியங்களாலும் ஸ்டாம்புகளை உருவாக்கி, காந்திஜியை கவுரவப்படுத்தியிருக்கிறார்கள். அவை ஒவ்வொன்றின் பின்னாலும் அபூர்வ சம்பவங்களும், அரிதான விஷயங்களும் இருக்கின்றன.." என்று அவர் ஒவ்வொரு ஸ்டாம்பையும் எடுத்துக்காட்ட, அவை பிரமிக்க வைக்கின்றன. பல நாடுகள் காந்திஜி உருவம் பொறித்த தங்க, வெள்ளி நாணயங்களை வெளியிட்டுள்ளன. பளபளப்பாக இருக்கும் அவைகளையும் அள்ளி கைகளில் எடுத்துக்காட்டுகிறார், ராஜேஷ். அவை விலைமதிப்பற்றவை!



குடும்பத்தினருடன் இடது ஓரத்தில் ராஜேஷ்.


"காந்திஜிக்கு 70 நாடுகளில் சிலை வைத்திருக்கிறார்கள். எந்த நாட்டில், எந்த இடத்தில் சிலை வைக்கப்பட்டிருக்கிறது. அங்கு அந்த சிலை வைக்கப்பட என்ன காரணம் என்பதை எல்லாம் நான் தொகுத்துவைத்திருக்கிறேன்" என்றபடி ஒவ்வொரு சிலை மாதிரியையும் காட்டி விளக்கத் தொடங்குகிறார்.

இவரிடம் இருக்கும் போட்டோ ஆல்பங்கள், 'காந்திஜி இப்படி எல்லாம் அபூர்வமாக காட்சி கொடுத்திருக்கிறாரா?' என்று திகைக்கவைக்கும் விதத்தில் இருக்கிறது. 400–க்கு மேற்பட்ட அரிதான போட்டோக்களை அடுக்கி வைத்து பாதுகாக்கிறார்.

"காந்திஜி எழுதிய கடிதங்கள், அவருக்கு வந்த தந்திகள், அவர் கையெழுத்திட்ட குறிப்புகள் போன்றவைகளையும் நான் நிறைய வைத்திருக்கிறேன்.." என்று ஒவ்வொன்றையும் எடுத்துக்காட்டுகிறார்.

கண்காட்சி நடத்தும் அளவிற்கு இவர் வைத்திருக்கும் பொக்கிஷங்கள் எல்லாம், கும்மிடிப்பூண்டி அருகில் உள்ள புது கும்மிடிப்பூண்டியில் உள்ள ராஜேஷின் வீட்டில் இருக்கிறது. அந்த சிறிய வீடு காந்திஜியின் ஆத்மா வாழும் இடமாகத் திகழ்கிறது.

ராஜேஷ்– விஜயலெட்சுமி தம்பதிகளுக்கு இரண்டு குழந்தைகள் ஸ்ரீஅரிஷா, ராகுல்ராம்.





காந்திஜி தொடர்புடைய இவ்வளவு அபூர்வ விஷயங்களை உங்களால் எப்படி சேகரிக்க முடிந்தது?

"சிறுவயதிலே எனக்கு அபூர்வமாகத் தெரிந்தவைகளை எல்லாம் சேகரித்தேன். எனக்கு நினைவு தெரிந்தபோது உலகத்திலே எந்த தலைவருக்கும் கிடைக்காத பெருமைகள் காந்திஜிக்கு கிடைத்ததை கண்டறிந்தேன். அதனால் காந்திஜி தொடர்புடைய பொக்கிஷங்களை தேடுவதில் என் முழு கவனத்தையும் செலுத்தினேன். இந்தியா முழுக்க சுற்றினேன். இது எங்களது பல வருட உழைப்பு. காந்திஜியிடம் தனிச் செயலாளராக பணிபுரிந்த பெரியவர் வி.கல்யாணம் எனக்கு சில பொக்கிஷங்களை கொடுத்து உதவியிருக்கிறார். நண்பர்களும் எனக்கு தோள்கொடுக்கிறார்கள்" என்கிறார், ராஜேஷ். இவரது பெற்றோர்: எம்.லோகநாதன்– லட்சுமிதேவி.

"காந்திஜியின் ஆத்மா தொடர்புடைய இந்த பொக்கிஷங்களை உலகம் முழுவதும் பரப்புவதற்காக காந்தி வேல்ட் பவுண்டேஷன் என்ற அமைப்பை தொடங்கினோம். அதுபற்றி முதல் அமைச்சர் ஜெயலலிதாவிற்கு தெரிவித்தோம். அவர் அனைத்து மாவட்டங்களிலும் இந்த அரிய பொக்கிஷங்களை கண்காட்சியாக நடத்த எங்களுக்கு அனுமதி கொடுத்து, அதற்கான உதவிகளை செய்ய மாவட்ட கலெக்டர்களுக்கு உத்தரவிட்டிருக்கிறார். முதல் காந்திய கண்காட்சியை அண்ணா பல்கலைக்கழகத்தில் நடத்தினோம். அதனை முன்னாள் ஜனாதிபதி அப்துல்கலாம் தொடங்கிவைத்து, அரிதான பொக்கிஷங்களைப் பார்த்து பாராட்டினார்" என்கிறார், ராஜேஷ்.

அப்துல்கலாம் பாராட்டிய, காந்திஜி பற்றிய உலகப்புகழ் பெற்ற 'திகைக்க வைக்கும் தேசப்பொக்கிஷங்களை' அடுத்த வாரம் போட்டோக்களுடன் காணலாம்.

# காட்டுக்குள் ஒரு காதல் மழை

**அடர்ந்த காடு. துள்ளிவிழும் அருவி. எங்கு பார்த்தாலும் அழகழகாய் மரங்கள். சின்னச் சின்ன வீடுகள். அதன் உள்ளே பழங்காலத்தை நினைவூட்டும் மனிதர்கள். திரையில் ஓடும் அந்த மண்ணையும், மனிதர்களையும் ரசித்துக்கொண்டே இருக்கலாம் என்று தோன்றும்போது, மூங்கில் கருவிகளின் இசை அற்புதமாக காதுகளை வருடுகிறது.**

**மலையில் சின்னதாய் ஒரு கோவில். அங்கே ஆணும், பெண்ணும் கூடுகிறார்கள். ஆரத்தி காட்டுகிறார்கள். வழிபாடு நடத்துகிறார்கள். தீயை மூட்டி சுற்றிச் சுற்றி ஆடுகிறார்கள். அவர்கள் அனைவர் உணர்விலும் பக்தி தீயாய் பாய்ந்து கொண்டிருக்க, அங்கே ஒரே ஒரு அழகுப் பெண்ணின் மனதில் மட்டும் காதல் தீ கொழுந்துவிட்டு எரிகிறது. ஏக்கம் அவள் உடலை எரியும் விறகுபோல் அனலாக்க, காதலனுக்காக காத்திருக்கிறாள். ஊர் தூங்கிவிடுகிறது. ஏக்கம் அவளை தூங்கவிடவில்லை.**



லீனா மணிமேகலை

அப்போது சங்கப் புலவர் அவ்வையார் பாடலின் கதாநாயகியாக அந்த காதல் பெண் மாறுகிறாள். பாடல் ஒலிக்கிறது. பாடல் பொருள்: 'என் காமத்தை அறியாமல் இந்த கிராமம் தூங்குகிறது' என்கிறது. வெகுநேர காத்திருப்புக்கு பிறகு காதலன் வருகிறான். அவளோடு காதல் விளையாட்டு புரிகிறான்.

அடுத்தும் அழகு நிறைந்த இயற்கை காட்சிகள். பழங்கால மக்களின் வாழ்க்கை படமாக ஓடுகிறது. மீண்டும் அதே காதல் ஏக்க கதாநாயகி வருகிறாள். காதல் தீ அவருக்குள் கொழுந்துவிட்டு எரிகிறது. அப்போது சங்க பெண் புலவர் வெள்ளிவீதியார் பாடல் ஒலிக்கிறது. அதன் பொருள்: 'என் ஜனன உறுப்புகள் பயன்படாமலே இருக்கின்றன, என் தலைவனே நீ இல்லாமல்! சுரக்கிற பால் சுவைக்கப்படாமல் கீழே சிந்திக்கொண்டிருப்பதைப்போல்..' என்கிறது.

அடுத்த காதல் ஏக்கப்பாடலுக்கு கைகொடுத்திருப்பவர், இன்னொரு சங்க கால பெண் புலவர் நெடும்பல்லியத்தை. இவர் பாடலுக்கு கதாநாயகி காதலில் உருகும்போது, தரும் விளக்கம் இன்னும் கொஞ்சம் ஆழம். 'என் தலைவனைப் பிரிந்து அழுது அழுது இரண்டு மார்பகங்களுக்குள் கண்ணீர் சுனையாகிவிட்டது. அதில் நாரைகள் வந்து மீன்பிடிப்பதை அறிவாயோ தலைவா..!' என்று உரைக்கிறது பொருள்.

.. இப்படியே பழங்கால காதலுக்கு, காமம் கலந்து சங்கப்புலவர்கள் தரும் விளக்கத்தை காட்சியாக்கியிருக்கிறது, 57 நிமிடங்கள் ஓடும் ஆவணப்படம். அதன் பெயர்: பெண்ணாடி. மத்திய அரசின் திரைப்படத்துறைக்காக தயாரிக்கப்பட்டிருக்கிறது. எழுதி– இயக்கியிருப்பவர் கவிஞர் லீனா மணிமேகலை. 11 ஆவணப்படங்களை இயக்கி, பல்வேறு தேசிய, சர்வதேச விருதுகளை பெற்றவர் இவர்.

அவரோடு பேசுவோம்..

'பெண்ணாடி' குறும்படத்தில் நீங்கள் சொல்ல விரும்பும் விஷயம் என்ன?

"நமது முன்னோர்கள் கடலோடு, அலையோடு, காடோடு, வயலோடு, வான் உயர்ந்த மரங்களோடு தானும் ஒரு அங்கமாக வாழ்ந்து பழகியவர்கள். நெய்தல், மருதம், பாலை போன்ற ஐந்திணைகளோடு சேர்ந்த உயிரினமாக அவர்களும் வாழ்ந்தார்கள்.

அப்படிப்பட்ட இயற்கை நிறைந்த நிலப்பரப்பு வாழ்க்கையில் இருந்து நாம் இப்போது முற்றிலும் துண்டிக்கப்பட்டவர்களாக இருக்கிறோம். அதனால் சங்ககால பெண் வெளியே பார்த்ததை, இன்றைய பெண் தன் உடலுக்குள்ளே தான் தேடிப்பார்க்க வேண்டியதிருக்கிறது. அதை இந்த படத்தில் காட்சிப்படுத்தியிருக்கிறேன்.



'பெண்ணாடி'யில் ஒரு காட்சி.

சங்ககால புலவர்களாக 365 பேர் அடையாளப்படுத்தப்படுகிறார்கள். அதில் 41 பேர் பெண்கள். அவர்கள் 3 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே காதலையும், காமத்தையும் எந்த கட்டுப்பாடுகளும் இன்றி தாங்கள் விரும்பிய வார்த்தைகளையில் பாடலாக்கியிருக்கிறார்கள். இப்போது காமம் பற்றி பெண் கவிஞர்கள் எழுதக்கூடாது என்ற கலாசார தணிக்கை உள்ளது. சங்கப் பெண்கள் எங்களைவிட வீரியமாக உடலை, உணர்ச்சிகளை வெளிப்படுத்தியிருக்கிறார்கள் என்பதை இலக்கிய சுவையோடு, இன்றைய பெண்ணின் நிலையோடு ஒப்பிட்டு உருவாக்கியுள்ளேன். அன்றைய பெண்ணை, இன்றைய பெண் திரும்பிப் பார்க்கிற படைப்புதான் பெண்ணாடி"

**அவ்வையார், வெள்ளிவீதியார் பாடல்களில் எவ்வளவோ கருத்துக்கள் இருக்க, அதற்குள் நீங்கள் காதல் ஏக்கம் நிறைந்த பாடல்களை மட்டும் தேடிப்பிடித்து காட்சிப்படுத்தியுள்ளீர்களே?**

"காமத்துப்பால் தந்த திருவள்ளுவர் நமது மரபு. போர் முனையிலும் காதலும், காமமும் அரங்கேறி குழந்தைகள் பிறக்கின்றன. காதலும், காமமும் உணர்ச்சிகளில் மறைத்து வைக்க முடியாத உண்மை. அதனால் சங்க கால இலக்கியத்தில் காதலும், ஏக்கமும் அதிகமாக விரவிக்கிடக்கிறது. காதலும், காமமும் ஒரு கலை. எல்லா கலைகளும் சமூகத்தின் மனசாட்சி. அவைகளை நாம் தேடலாம். படைக்கலாம். அவைகளை நாம் அடக்கிவைப்பதுதான் தப்பு.."



தயாமணி பார்லா

**அந்தக் காலத்திலும், இந்தக் காலத்திலும் காதல் சூடான விற்பனை பொருளாக இருக்கிறது அல்லவா?**

"இல்லை. அது எல்லோராலும் விரும்பப்படும் பொருளாக இருக்கிறது. காதல் இல்லாவிட்டால் மனிதன் இல்லை. இந்த சமூகம் இல்லை. அன்பிற்கு பல கிளைகள் இருக்கின்றன. அதில் முக்கியமானது காதல். இன்னொன்று காமம்.."

**அவைகளை பச்சையாக சொல்வது, பக்குவமாக சொல்வது எது நல்லது?**

"பச்சை, பக்குவம் என்ற எல்லை எதுவும் கவிஞனுக்கோ, புலவனுக்கோ கிடையாது. கலைஞனான அவன் தன் உணர்ச்சிகளை, உணர்வுகளை மறைக்காமல் சமூகத்திற்கு சொல்ல வேண்டியது அவசியம். அதை அன்றைய புலவர்கள் எப்படி சொல்லியிருக்கிறார்கள். நாம் எப்படி உணர்கிறோம் என்பதை பெண்ணாடி மூலம் சொல்லியிருக்கிறேன்"

**நீங்கள் கவிதைகள், ஆவணப்படங்கள் மூலம் உலகில் காதலை மேம்படுத்துவதாக உணர்கிறீர்களா?**

"நான் காதலை மட்டும் எழுதவில்லை. அரசியலையும் எழுதியிருக்கிறேன். பெண்களின் காதல், காமம் பற்றி எதை படைத்தாலும் அவைகளை ஆழ்ந்து பார்த்தால் அதிலும் அரசியல் இருக்கத்தான் செய்யும். படைப்புகள் மூலம் நான் காதலை மேம்படுத்துகிறேன் என்று சொல்வதற்கில்லை. ஏன் என்றால் காதல் இல்லாவிட்டால் சமூகமே இல்லை."

**உங்களுக்கு காதல் ரொம்ப பிடிக்குமா?**

"காதல் மென்மையானது. அழகானது. எல்லோருக்கும் அது பிடிக்கவேண்டும். காதலிப்பதும், காதலை படைப்பதும் மிக சுகமான அனுபவம். இந்த சமூகத்தில் மிகவும் கொண்டாடத்தக்கது காதல்தான்.."

**பெண்ணாடியின் சிறப்புகள் என்ன?**

"நீலகிரி, ஆலம்பறா போர்ட், பழவேற்காடு, கேரளா, கர்நாடகா போன்ற பகுதிகளில் உள்ள பச்சைப்பசேல் பகுதிகளை தேடிப்பிடித்து படமாக்கினோம். கதாநாயகியாக சாந்தினி நடித்துள்ளார். இசைக்கு 45 விதமான மூங்கில் இசைக்கருவிகளை பயன்படுத்தியிருக்கிறோம். அரிமளம் பத்மநாபன் சங்ககால பாடல்களுக்கு இசை அமைத்துள்ளார். உன்னிகிருஷ்ண பக்கனார் என்பவர் மூங்கில் கருவிகள் மூலம் பின்னணி இசை அமைத்திருக்கிறார். அகிலா பாடியுள்ளார். இவ்வளவு சிறப்பான குழு இடம் பிடித்ததால்தான் மனதை வருடும் விதத்தில் சங்ககால காதலை எடுத்துச்சொல்ல முடிந்தது"

**அடித்தட்டு மக்களின் நலனுக்காக, நீங்கள் சமீபத்தில் எடுத்திருக்கும் ஆவணப்படம்?**

"பேலட் ஆம் ரெஸிஸ்சன்ஸ் என்ற ஆவணப்படத்தில் ஜார்கண்ட் மாநில ஆதிவாசி மக்களின் குமுறலை படமாக்கியுள்ளேன். தங்கள் உயிரோடும், உணர்வோடும் கலந்த விளைபூமியை ஆதிக்க சக்திகள் ஆக்கிரமிப்பதற்கு எதிராக அவர்கள் போராட்டம் நடத்திக்கொண்டிருக்கிறார்கள். அந்த போராட்டத்தை தயாமணி பார்லா என்ற பெண்மணி முன்னெடுத்து செல்கிறார். அவர் ஆதிவாசிகள் சமூகத்தின் முதல் பெண் பத்திரிகையாளராகும். அவரது பேட்டியை பதிவு செய்திருக்கிறேன். தற்போது அவர் ஜெயிலில் அடைக்கப்பட்டுள்ளார். இந்த படத்தை தயாரிக்க சர்வதேச பெண் பத்திரிகையாளர் இயக்கம் நிதி உதவி செய்துள்ளது. நான் ஏற்கனவே செங்கடல் என்ற முழு நீள திரைப்படத்தையும் இயக்கியுள்ளேன். உலக பட விழாவில் திரையிடப்பட்டு மக்களை கவர்ந்த இந்த சினிமா, கடந்த ஆண்டு உலக பட விழாவில் திரையிடப்பட்ட ஒரே தமிழ் சினிமா என்பது குறிப்பிடத்தக்கது. விரைவில் அது திரைக்கு வர இருக்கிறது. அந்தரகன்னி என்ற கவிதை தொகுப்பையும் வெளியிடயிருக்கிறேன்."

**ஆவணப்பட இயக்கத்தில் உங்கள் லட்சியம் என்ன?**

"அன்பையும், காதலையும், அமைதியையும் உலகம் முழுக்க உருவாக்கவேண்டும். ஆதிக்க சக்திகளின் அடக்குமுறையை மக்களிடம் கொண்டுபோய் சேர்த்து விழிப்புணர்ச்சியைஏற்படுத்த வேண்டும்"

ஹோமியோகேர் இன்டர்நேஷனல் பி.லிட்
LEADERS IN WORLD-CLASS HOMEOPATHY
www.homeocare.in
சர்வதேச ஹோமியோ சிகிச்சை இப்போது தமிழகத்தில்
Call: 822 000 7799 / 8220 11 4422
★ ஹார்மோன்ஸ் பிரச்சினை
★ மாதவிடாய் கோளாறுகள்
★ மூட்டு வலி ★ தைராய்டு
★ சர்க்கரை வியாதி
★ மலட்டுத்தன்மை ★ சரும வியாதி
★ செக்ஸ் பிரச்சினைகள்
★ உடல் பருமன் & உயரம் பிரச்சினைகள்
Experience & Expertise 34 Years Excellence
Toll Free No : 1800 10 22202
சென்னை :
• சி.ஐ.டி நகர். மவுண்ட் ரோடு அருகில்.
• அமிஞ்சிக்கரை, அண்ணா ஆர்ச் எதிரில்.
இலவச ஆலோசனை
❖ கோயம்புத்தூர் ❖ மதுரை
ஹைதராபாத் ❖ விஜயவாடா ❖ திருப்பதி
விசாகப்பட்டினம் ❖ ராஜமுந்திரி
பெங்களூரு ❖ மாங்களூரு ❖ ஹுப்ளி
முழுமையான ஆரோக்கிய பாதுகாப்பு – ஹோமியோகேர் மூலம்.